பொங்குபாளையம் ஊராட்சியில்

குப்பைகளால் சுகாதார சீர்கேடு

பொதுமக்கள் அவதி

▶ அவிநாசி அருகே பொங்குபாளையம் ஊராட்சியில் பரமசிவம்பாளையம் பஸ் ஸ்டாப்பில் குப்பைகள் குவிந்ததால் துர்நாற்றம் வீசி தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அவிநாசி, ஜூன் 12: அவிநாசி அருகே பொங்குபாளையம் ஊராட்சியில் பரமசிவம்பாளையம் பஸ் ஸ்டாப்பில் குப்பைகள் குவிந்ததால் துர்நாற்றம் வீசி தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பொங்குபாளையம் ஊராட்சி பகுதிகளில் ஆங்காங்கே பரமசிவம்பாளையம் பஸ் ஸ்டாப்பில் குப்பை முறையாக அள்ளிச் செல்லாமல் தேங்கி குவிந்து கிடக்கிறது.

இதேபோல், அருகருகே 50 மீட்டர் தொலைவில் ரோட்டோரத்தில் குப்பைகள் குவிந்து, கடும் துர்நாற்றம் வீசி சுகாதார சீர்கேடு ஏற்பட்டு தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்படுகிறது. இங்கு கொட்டப்பட்டு வரும் குப்பைகளால் அப்பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசி வருகிறது.

இதனால், பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் அருகில் வசிக்கும் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். பரமசிவம்பாளையம் பஸ் ஸ்டாப் பகுதியில் கழிவு குப்பைகள். இறைச்சி கழிவுகள் பிளாஸ்டிக் கழிவுகள் போன்றவற்றை கொட்டப்படுகிறது. முறையாக உடனுக்குடன் அகற்றாமல் பல நாட்கள் தேங்கி கிடைக்கிறது. இதனால், அப்பகுதியில் கொசு மற்றும் ஈக்கள் தொல்லையும் அதிகரித்துள்ளது.

தேங்கி கிடக்கும் காய்கறி கழிவுகளும், பிளாஸ்டிக் குப்பைகளும் முறையாக அள்ளப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன. காய்கறி கழிவுகள் என்பதால் அவை அழுகி ஈக்கள் மற்றும் கொசுக்களின் தொல்லை அதிகரித்து. அப்பகுதியில் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி பொதுமக்கள் தரப்பில் பல முறை ஊராட்சி அதிகாரிகளிடம் புகார் அளித்தும் இதுவரை எவ்வித நிரந்தர நடவடிக்கையும் பொங்குபாளையம் ஊராட்சி நிர்வாகம் எடுக்கவில்லை. மீண்டும் இப்பகுதியில் குப்பை கொட்டாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

முதியோர் காப்பகத்தில் நலத்திட்ட உதவி

திமுக எம்பி, எம்எல்ஏக்கள் வழங்கினர்

▶ மானுப்பட்டி தெரசா முதியோர் காப்பகத்தில் முதியோருக்கு சீருடை மற்றும் உணவை ஈஸ்வரசாமி எம்பி வழங்கினார். அருகில் எம்எல்ஏக்கள் ஜெயராமகிருஷ்ணன், ஜெயக்குமார், மற்றும் பலர் உள்ளனர்.

உடுமலை, ஜூன் 12: கலைஞரின் 103-வது பிறந்தநாளை முன்னிட்டு, திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக மற்றும் மாவட்ட மீனவரணி சார்பில் மானுப்பட்டியில் உள்ள அன்னை தெரசா முதியோர் காப்பகத்தில் முதியோருக்கு வேட்டி, சேலை, பெட்ஷீட் மற்றும் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

மாவட்ட மீனவரணி அமைப்பாளர் வாசு வரவேற்றார். ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.பாபு, எம்எல்ஏக்கள் ஜெயராமகிருஷ்ணன், ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார். மாவட்ட திமுக பொறுப்பாளரும், பொள்ளாச்சி எம்பியுமான ஈஸ்வரசாமி தலைமைவகித்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் உடுமலை நகர திமுக செயலாளர் வேலுச்சாமி, ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, செழியன், ஒன்றிய செயலாளர்கள் செந்தில்குமார், மாரிமுத்து, சாகுல்அமீது மற்றும் ராதிகா இளங்கோவன், முருகானந்தம், விக்ரமன், நகர. ஒன்றிய, மாவட்ட மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் ரவுண்ட் டேபிள் 116, லேடீஸ் சர்க்கிள் சார்பில்

அரசு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்டம்

திருப்பூர், ஜூன் 12: திருப்பூர் கணபதிபாளையம் அரசுப் பள்ளியில் உள்கட்டமைப்பு மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், திருப்பூர் ரவுண்ட் டேபிள் 116 மற்றும் திருப்பூர் லேடீஸ் சர்க்கிள் 44 ஆகிய அமைப்புகள் சார்பில் பள்ளி வகுப்பறைக்கான இருக்கைகள் வழங்கும் திட்டம் நேற்று நடைபெற்றது.

மாணவர்களின் கல்விச் சூழலை மேம்படுத்தும் தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக, எப்.டி.இ திட்டத்தின் கீழ் இப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் புதிய வகுப்பறைகளுக்குப் பயன்படும் வகையில், சுமார் 70 புதிய நாற்காலிகள் பள்ளி நிர்வாகத்திடம் வழங்கப்பட்டன.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் வகையில் இந்த நலத்திட்டம் செயல்படுத்தப்பட்டதாக இவ்வமைப்புகளின் நிர்வாகிகள் தெரிவித்தனர். இத்திட்டத்தின் மூலம் பள்ளி உள்கட்டமைப்பு மேம்பட்டுள்ளதுடன், மாணவர்களின் கற்றல் சூழலும் மகிழ்ச்சியானதாக மாறியுள்ளது எனப் பள்ளி ஆசிரியர்களும் பொதுமக்களும் பாராட்டுத் தெரிவித்தனர்.

திருப்பூர் மாவட்ட நலச்சங்க செயல்பாடு குறித்த ஆலோசனை

திருப்பூர், ஜூன் 12: திருப்பூர் கலெக்டர் மனிஷ் தலைமையில் மாவட்ட நலச்சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு நிதி விபரங்கள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து கலெக்டர் மனிஷ் மாவட்ட நலச்சங்கத்தின் புதிய இணையதளத்தினை tiruppurwelfaresociety.org துவக்கி வைத்து, இந்த இணையதளம் வாயிலாக தொழில் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பதிவு செய்து பங்களிப்பு நிதி வழங்கிட கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையாளர் அமித், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் சங்கமித்திரை, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) துரைமுருகன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவபிரகாஷ் மற்றும் திருப்பூர் மாவட்ட நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கிணற்றில் தண்ணீர் எடுப்பதை தடுக்க வேண்டும்

கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் மனு

திருப்பூர், ஜூன் 12: திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு அம்மாபாளையத்தை சேர்ந்த பொதுமக்கள் கலெக்டரிடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது: எங்களது பகுதியில் கிணறு அமைக்க இந்த பகுதி சாராத சிலர் தவறான தகவல், போலி ஆவணங்கள் மூலம் அனுமதியை பெற்றுள்ளனர். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களது பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளது. எனவே, கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதை தடுக்க வேண்டும்.

வீட்டுமனை பிரிவு என்பதை மறைத்து விவசாய பூமி எனவும் ஆவணம் தயார் செய்துள்ளனர். இதற்கு அதிகாரிகளும் உடந்தையாக இருந்துள்ளனர். எனவே, இதற்கான அனுமதியை ரத்து செய்ய வேண்டும். கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதை தடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறி உள்ளனர்.

அவிநாசி அருகே

புகையிலை பொருட்கள் விற்ற மளிகை கடைக்கு சீல்

▶ அவிநாசி சாவக்கட்டுப்பாளையத்தில் புகையிலை பொருட்கள் விற்பனை செய்த மளிகை கடையில், திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அவிநாசி, ஜூன் 12: அவிநாசி அருகே தடை செய்யப்பட்ட புகையிலை பொருள்கள் விற்பனை செய்த மளிகைக்கடைக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர்.

மாவட்ட உணவுப்பாதுகாப்பு அலுவலர் ஸ்டாலின் பிரபு தலைமையில் சேவூர் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஷாஜகான், தனபாக்கியம், ஊராட்சி செயலாளர் கண்ணன் ஆகியோர் சேவூர் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள கடைகளில் நேற்று முன்தினம் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, அவிநாசி அருகே சாவக்கட்டுப்பாளையத்தில் உள்ள மளிகைக் கடையில் சோதனை நடத்தியபோது, தடைசெய்யப்பட்ட புகையிலை பொருள்கள் விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து அந்த கடைக்கு 'சீல்' வைத்தனர்.

மேலும், கடை உரிமையாளர் மீது வழக்குப்பதிவு செய்து, அவருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம் விதித்தனர். அவிநாசி- மேட்டுப்பாளையம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது, புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடை உரிமையாளர்களிடம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூரில்

அம்மா உணவகத்தின் பெயர் மறைப்பு

அதிமுகவினர், பொதுமக்கள் அதிருப்தி

▶ திருப்பூர் சந்திராபுரம் அம்மா உணவகத்தில் கடந்த திமுக ஆட்சியின் போது மறைக்கப்படாத அம்மா உணவகத்தின் பெயர் தற்போது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மறைத்து வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர், ஜூன் 12: தமிழகத்தில் புதிய அரசு அம்மா உணவகங்களை மூடிவிடாமல், முன்பை விட மேம்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவோம் எனத் தெரிவித்திருந்தது. அரசின் இந்த அறிவிப்பு மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்நிலையில், அறிவிப்புக்கு மாறாக திருப்பூர் சந்திராபுரம் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தின் அம்மா என்ற வார்த்தை மறைக்கப்பட்டுள்ளது. அரசின் கொள்கை முடிவுக்கு மாறாக, அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

கடந்த திமுக ஆட்சியின் போது அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் இல்லாமல் அம்மா உணவகங்கள் முறையாக செயல்பட்ட நிலையில் தவெக அரசு பொறுப்பேற்று ஒரு மாத காலத்திற்குள்ளாக அம்மா உணவகத்தின் பெயரை மறைத்திருப்பது அதிமுக கட்சியினர் மட்டுமல்லாது பொதுமக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தனியார் மதுபான கூடத்தை மூட வேண்டும்

கலெக்டர் அலுவலகம் முற்றுகை

▶ உடுமலை முக்கோணம் ராஜீவ் நகர் பகுதியில் உள்ள தனியார் மதுபான கூடத்தால் பொதுமக்களுக்கு இடையூறும், பாதுகாப்பற்ற சூழலும் நிலவுவதால் அதனை அகற்றக்கோரி அப்பகுதி பொதுமக்கள் திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தை நேற்று முற்றுகையிட்டனர்.

திருப்பூர், ஜூன் 12: திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு, உடுமலை முக்கோணம் ராஜீவ்நகர் பொதுமக்கள் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் பகுதியில் குடியிருப்பு அருகில் ஆனைமலை ரோடு ரெயில்கேட் அருகில் தனியார் மதுபான கூடம் உள்ளது. இதனால் பொதுமக்கள் பலரும் பாதிக்கப்பட்டு வருகிறோம். இரவு நேரங்களில் அடிக்கடி மதுபோதையில் பலர் தகராறில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுபோல் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுகிறது.

ரயில்வே கேட் இருப்பதால் விபத்து ஏற்படும் நிலை உள்ளது. மதுபோதையில் பலர் வேகமாக ரயில்வே கேட்டை கடந்து செல்கிறார்கள். எனவே, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் தனியார் மதுபான கூடத்தை உடனே மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறி உள்ளனர்.

இன்ஜினியரின் லேப்டாப்பை திருடிய தவெக நிர்வாகி கைது

திருப்பூர், ஜூன் 12: திருப்பூர் மாவட்டம் மன்னரை கிராமத்தை சேர்ந்தவர் ஜெயக்குமார் (39). இவர் சென்னையில் சிவில் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறார். நேற்றுமுன்தினம் இரவு சென்னையில் இருந்து மதுரைக்கு அரசு பேருந்தில் சென்று கொண்டிருந்தார். விக்கிரவாண்டி பகுதியில் உள்ள தனியார் ஓட்டலில் டீ சாப்பிடுவதற்காக பேருந்தை டிரைவர் நிறுத்தி உள்ளார். டீ சாப்பிடுவதற்காக ஜெயக்குமார் அவரது பையை பேருந்து சீட்டில் வைத்துவிட்டு இறங்கியுள்ளார். அப்போது பேருந்தில் இருந்த மர்ம நபர் ஒருவர், பையில் இருந்த ரூ.1 லட்சம் மதிப்பிலான லேப்டாப்பை திருட முயற்சி செய்துள்ளார். இதனை வெளியில் டீ அருந்தியபடி கவனித்த ஜெயக்குமார் கூச்சலிட, அங்கிருந்த சக பயணிகள் அந்த நபரை கையும் களவுமாக மடக்கி பிடித்தனர். பின்னர் லேப்டாப்பை அவரிடமிருந்து பறிமுதல் செய்த பயணிகள் அவரை விக்கிரவாண்டி போலீசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையில், அந்த நபர் திருக்கோவிலூர் அருகே முருக்கம்பாடி அண்ணா நகரை சேர்ந்த குமார் மகன் கண்ணப்பன்(32) என்பதும், தவெக செயலாளர் என்பதும் தெரியவந்தது. மேலும் இவர் திருக்கோவிலூர்-திருவண்ணாமலை வழித்தட தனியார் பஸ் கண்டக்டராக பணிபுரிவதும் தெரிந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குபதிந்து கண்ணப்பனை கைது செய்தனர்.

அடையாளப்பூர்வ சுவாதீன அறிவிப்பு

ICICI Home Finance

பதிவு அலுவலகம்: ஐசிஐசிஐ வங்கி டவர்ஸ், பாந்த்ரா-குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400051

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ எச்சப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, ஜேபி நகர், அந்தேரி கிழக்கு, மும்பை-400059.

கிளை அலுவலகம்: முதல் தளம், கதவு எண்.66, ஜி.ஜி.டவர்ஸ், குமரன் சாலை, டவுன் ஹாலுக்கு எதிரில், திருப்பூர்-641601

இவ்வாறிருக்க

கீழே கையொப்பமிட்டவர் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல், நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிட்ட கடன்தாரர்களுக்கு கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளதால், கடன்தாரர் மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கு இதன்மூலம் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்டவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை கீழ்க்குறிப்பிட்ட தேதிகளில் சுவாதீனம் செய்துள்ளார். கடன்தாரருக்கு குறிப்பிட்டும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது சொத்துடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் வசூலுக்கு உட்படும். கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப் பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13-இன் உட்பிரிவு (8) விதிமுறைகள் இதன் மூலம் கடன்தாரர் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

வ. எண்	கடன்தாரர்/ உப-கடன்தாரர் பெயர்/ கடன் கணக்கு எண்	சொத்து விவரம் / சுவாதீனம் நாள்	கோரிக்கை அறிவிப்பு நாள்/ கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகை (ரூ.)	கிளை பெயர்
1.	சுப்புராஜ் (கடன்தாரர்), தங்கம் (உப-கடன்தாரர்), 1675, தனலட்சுமி, லேஅவுட் கந்தசாமி காம்பவுண்டு, திருப்பூர், கருவம்பாளையம், திருப்பூர், கத்தாங்கண்ணி, திருப்பூர், திருப்பூர்-641604, தமிழ்நாடு LHTIR00001644770	S.F.No.266/2 புதிய S.F.No.266/2A, திருப்பூர் S.F.No.266/2, புதிய S.F.No.266/2A, திருப்பூர்-640601 தமிழ்நாடு, எல்லைகள்: வடக்கு: மனை எண்.19, தெற்கு: மனை எண்.21, கிழக்கு: S.F.No.266/2B, மேற்கு: 23 அடி அகல தெற்கு வடக்கு / சுவாதீன தேதி: 09- ஜூன் -26	18-03-2026 Rs. 14,35,159/-	திருப்பூர்
2.	சுப்புராஜ் (கடன்தாரர்), தங்கம் (உப-கடன்தாரர்), 1675, தனலட்சுமி, லேஅவுட் கந்தசாமி காம்பவுண்டு, திருப்பூர், கருவம்பாளையம், திருப்பூர், கத்தாங்கண்ணி, திருப்பூர், திருப்பூர்-641604, தமிழ்நாடு LHTIR00001644804	S.F.No.266/2 புதிய S.F.No.266/2A, திருப்பூர் S.F.No.266/2, புதிய S.F.No.266/2A, திருப்பூர்-640601 தமிழ்நாடு, எல்லைகள்: வடக்கு: மனை எண்.19, தெற்கு: மனை எண்.21, கிழக்கு: S.F.No.266/2B, மேற்கு: 23 அடி அகல தெற்கு வடக்கு/ சுவாதீன தேதி: 09- ஜூன் -26	18-03-2026 Rs. 55,192/-	திருப்பூர்

மேற்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) தொகையை திருப்பிச் செலுத்துவதற்குரிய 30 நாட்கள் அறிவிப்பு இதன்மூலம் வழங்கப்படுகிறது, அதுவன்றியும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதிகள் 8 மற்றும் 9 கீழ் விதிகளின்படி, இந்த அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு அடமான சொத்துகள் விற்பனை செய்யப்படும்.

நாள்: 12.06.2026
இடம்: திருப்பூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

pnb Housing Finance Limited Ghar Ki Baat

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கே.ஜி. மார்க், புதுடெல்லி-110001
தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com
ஈரோடு கிளை: 139, URT டவர், முதல் தளம், பெருந்துறை சாலை, ஈரோடு 638011.

நாளது தேதிய திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 3(1) உடன், பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு

நாங்கள், பின்னர் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனிமேல் "பிஎன்பிஹச்எல்" ஆக குறிப்பிடப்படும்) பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (இனிமேல் "சட்டம்" ஆக குறிப்பிடப்படும்) இன் அத்தியாயம் III இன் பிரிவு 13(2) கீழ் கோரிக்கை அறிவிப்பு வழங்கியிருந்தோம். தவணைகள்/வட்டி செலுத்தப்படாத காரணத்தால் இந்திய ரிசர்வ் வங்கி/ நேஷனல் ஹவுசிங் பேங்க் வழிகாட்டுதல்களின்படி உங்கள் கணக்கு செயல்படா சொத்துகள் ஆக வகைப்படுத்தப்படலாகிறபடியால் கீழே குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் அதிகாரப்பூர்வ அதிகாரி மூலம் மேற்கூறிய கோரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டது. அதன் உள்ளடங்கங்கள் ஆனது அசல், வட்டி ஏனைய தவணைகளைச் செலுத்துவதில் நீங்கள் பொறுப்பு தவறியிருக்கிறீர்கள். நிலுவைத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கொண்டு, காரணங்களால், நீங்கள் கோரிக்கை அறிவிப்பு பெறுவதைத் தவிர்ப்பதாக நாங்கள் நம்புகிறோம் எனவே இந்த கோரிக்கை அறிவிப்பு பிரசுரம் மேற்கொண்டுவருகின்றோம் இது மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் தேவைப்படுவதாகவும் ஆகிறது. இதன்மூலம் நீங்கள் இந்த கோரிக்கை அறிவிப்பு பிரசுரமான தேதியிலிருந்து 60 நாட்கள் காலத்திற்குள் மேற்கூறியத் தொகையை நாளது தேதிய வட்டி மற்றும் கட்டணங்களுடன் பின்னர் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு செலுத்துமாறு கோரப்படுகிறீர்கள், தவறினால் பின்னர் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆனது கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களின் கடனீட்டுச் சொத்துகளை சுவாதீனம் செய்தல் உட்பட அனைத்து அல்லது ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடனீட்டுச் சொத்துகளுக்கு எதிராக, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) இன் அனைத்து அல்லது ஏதேனும் விதிமுறைகளின் கீழ் உரிய நடவடிக்கைகள் எடுக்கும். பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 இன் பிரிவு 13 இன் உட்பிரிவு (8) விதிமுறைகள் உங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன இதன்கீழ் நீங்கள் பொதுமக்களிடமிருந்து விலைப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி வரவேற்பதன் மூலமான, பொது ஏலம் மூலம் அல்லது தனி ஒப்பந்தம் மூலம் கடனீட்டு சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு பிரசுரமாகும் தேதி வரை மட்டும் பின்னர் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு ஏற்பட அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து முழு நிலுவைத்தொகையை அளிக்கலாம்/செலுத்தலாம். பின்பு ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு ஏற்பட செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் சேர்த்து முழு நிலுவைத்தொகையை ஆனது பொதுமக்களிடமிருந்து விலைப்புள்ளிகள், ஒப்பந்தப்புள்ளி வரவேற்பதன் மூலமான, பொது ஏலம் மூலம் அல்லது தனி ஒப்பந்தம் மூலம் கடனீட்டுச் சொத்துகள் விற்பனைக்கான அறிவிப்பு பிரசுரமாகும் முன்பு செலுத்தப்படாத விட்டால், அதன்பிறகு நீங்கள் கடனீட்டுச் சொத்தினை(களை) மீட்பதற்கு உரிமையுள்ளவராகாது. மேற்கொண்டு, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13) கீழ் மேற்கூறிய கடனீட்டுச் சொத்துகளை விற்பனை, குத்தகை அல்லது ஏதேனும் பிற வழியில் பெயர்மாற்றம் செய்வதற்கு நீங்கள் தடை செய்யப்படுகிறீர்கள்.

கடன் கணக்கு எண்(கள்)	கடன்தாரர் / உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் மற்றும் முகவரி	ஜாமீன்தாரர் பெயர் & முகவரி	அடமான சொத்து/களின் விவரம்	கோரிக்கை அறிவிப்பு தேதி	கோரிக்கை அறிவிப்பின்படி நிலுவைத்தொகை
HOU/ERD/0220/783002,NHL/ERD/1122/104 7478, கி.அ.: ஈரோடு	திரு. R. சந்திரபிரகாஷ் & திருமதி. சாந்தாதேவி G. 1. எண் 1/7, ஜஸ்வர்யா நகர் மெயின் ரோடு, ஜஸ்வர்யா நகர், P.N. புதூர், கோயம்புத்தூர் - 641041. 2. எண் 1168/4 7, 3-வது தளம், மொரியூ365 டேட்டா சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சம்ஸ்ரியா டவர்ஸ், அவினாசி சாலை, பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் - 641037. 5. மனை எண் 25, RSF எண் 149/3, ஸ்ரீ சக்தி நகர் இரண்டாம் கட்டம், கெங்கயபாளி கிராமம், பெருந்துறை சார்பதிவு அலுவலகம், பெருந்துறை - 638052.	வாரிசுதாரர்	ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், கெங்கயபாளி கிராமம், பழைய சர்வே எண்கள் 93A மற்றும் 94A ஆகியவற்றில் உள்ள நிலத்தில், புதிய சர்வே எண் 149/3-ல் 4.15 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் 'ஸ்ரீ சக்தி நகர் இரண்டாம் கட்டம்' என்ற பெயரில் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு (லேஅவுட்), சேலம் நகர் மற்றும் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநரால் 14.08.2018 தேதியிட்ட Na.Ka.No.1463/2018-ன் படி அங்கீகரிக்கப்பட்டது; மேலும் இது எண் 577/2018-ன் கீழ் முறைப்படுத்தப்பட்டது. மேற்படி மனைப்பிரிவில் (லேஅவுட்), மனை எண் 25-ன் எல்லைகள் பின்வருமாறு: கிழக்கே - 25 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு சாலை; மேற்கே - மனை எண் 38; வடக்கே - மனை எண் 26; தெற்கே - மனை எண் 24. இதன் நடுவே, வடக்கு-தெற்கு இரு பக்கங்களிலும் 30 அடி மற்றும் கிழக்கு-மேற்கு இரு பக்கங்களிலும் 30 அடி அளவுள்ள, மொத்தம் 900 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம்; இதனுடன் பொதுப் பாதை உரிமைகள், மனைப்பிரிவு உரிமைகள் மற்றும் அதனுடன் இணைந்த அனைத்து உரிமைகளும் அடங்கும். மேற்கூறிய சொத்து கெங்கயபாளி ஊராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. சமீப்திய உட்பிரிவின்படி, இச்சொத்து ஈரோடு மாநகராட்சியின் 16-வது வார்டில் அமைந்துள்ளது.	04-06-2026	04-06-2026 தேதியன்று ரூ.28,65,175.95 (இருபத்தெட்டு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நூற்று எழுபத்தைந்து மற்றும் பைசா தொன்னூற்றைந்து ரூபாய் மட்டும்

இடம்: கோயம்புத்தூர், தேதி: 12.06.2026

அதிகாரப்பூர்வ அதிகாரி, (M/s பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்)

GRIHUM HOUSING FINANCE

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018

**மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொ